09 JAN 2010

சுருக்கம்

பழனி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுவரும் ஒரு அறையினை பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் நிர்வாகத்திற்கு தகவல் மையம் அமைத்துக் கொள்ள இலவசமாக வழங்க அனுமதி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை

அரசு ஆணை(நிலை) எண்:5

நாள் 7.01. 2010

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.52953/ 2009/ ஆர்3, நாள் 12.11.2009.

---

**ஆணை:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில், பழனி நகராட்சியில் புதிய பேருந்து விரிவாக்க கட்டிடம் ரூ.7.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது என்றும், இதற்கு அறநிலையத்துறையின் சார்பாக ரூ.3.30 கோடி, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகம் வழங்கியுள்ளது என, பழனி நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதாகவும், மேலும், பழனி நகராட்சியானது அறுபடை வீடுகளில் ஒன்றான அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் அமைந்துள்ள திருத்தலம் என்றும் இந்நகருக்குள் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும் சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்வதால் தற்பொழுது கட்டப்பட்டு வரும் புதிய விரிவாக்கப் பேருந்து நிலையத்தில் அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவில் நிர்வாகத்தினருக்கு தகவல் மையம் வைத்துக் கொள்ள ஒரு அறை ஒதுக்கீடு செய்து தருமாறு அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் கோரியுள்ளார் எனவும், எனவே புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் பேருந்து நிலைய வடமேற்கு பகுதியில் பயணிகள் நுழைவுவாயிலின் தெற்குப்புறம், பிளாக் எண்.2–ல் அமைந்துள்ள விசாரணை அறையை அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் தகவல் மையம் அமைத்துக் கொள்வதற்கு இலவசமாக வழங்கலாம் என நகர்மன்றம் தனது தீர்மான எண்.268, நாள் 29.10.2009–ல் தீர்மானித்துள்ளதாகவும், தெரிவித்துள்ளார்.

2) எனவே, பழனி பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டு வரும் வடமேற்குப் பகுதியில் பயணிகள் நுழைவு வாயிலுக்கு தெற்குப் புறம் பிளாக் எண் 2–ல் (Block II) உள்ள விசாரணை அறையை அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு இலவசமாக ஒதுக்கீடு செய்து ஆணை வழங்க கோரும் நகராட்சி ஆணையரின் செயற்குறிப்பின் மீது ஆணை வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) மேலே பத்தி 2-ல் உள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் நிர்வாகம் அறநிலையத்துறையின் சார்பாக பேருந்து நிலைய விரிவாக்க பணிக்கு ரூ.3.30 கோடி வழங்கியுள்ளதை கருத்திற்கொண்டு, நகர்மன்ற தீர்மானத்தை ஏற்று, நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரைபடி இதனை ஒரு சிறப்பினமாகக் கருதி, புதிதாக கட்டப்படும் பேருந்து நிலைய வணிகவளாக அறைகளை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட வேண்டும் என நடைமுறையிலுள்ள குத்தகை விதிகளை தளர்த்தி, பழனி பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தின் வடமேற்கு பகுதியில், பயணிகளின் நுழைவு வாயிலுக்கு தெற்குப்புறம், பிளாக் எண்.2-ல் அமைந்துள்ள அறையை பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் நிர்வாகத்திற்கு தகவல் மையம் அமைக்க இலவசமாக வழங்க அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

*// ஆளுநரின் ஆணைப்படி //*

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம் சென்னை-600 005.
நகராட்சி ஆணையர் பழனி நகராட்சி.

நகல்:

மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் தனிச் செயலர், சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநி2) துறை, சென்னை- 600 009.
இ.கோ/ உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்